# குறுந்தொகைத் தொடரமைப்பு

**முனைவர் கா. உமாராஜ்**
உதவிப் பேராசிரியர்
மொழியியல் துறை
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.
கைபேசி : 9487223316

**முன்னுரை**

சொற்கள் ஒன்றோடொன்று இணைந்து தொடர்களாக முதலில் அமைந்து, பின்னர் வாக்கியங்களாக அமைகின்றன.இவ்வமைப்பே, தொடரமைப்பு என்றும் வாக்கிய அமைப்பு என்றும் அழைக்கப்படுகிறது. சொற்கள்ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்படும் நிலையில் தான் பொருண்மை வெளிப்பாடு தெளிவாகவும் உரிய முறையில் அமையும் .சொற்களிடையே இலக்கண அமைப்பில் இயைபு காணப்படுகிறது. இதை இயைபு தொடரியைபு (concord) எனப்படுகிறது.இத்தகைய இயைபு ,பொருண்மை வெளிப்பாட்டிற்கும், இலக்கண ஒழுங்கமைவிற்கும் மிகவும் தேவையானதாகவும் அமைந்து வருகிறது. இக்கட்டுரை குறுந்தொகைப் பாடல்களில் எவ்வாறு தொடரமைப்புள்ளது என்பதை விளக்குகிறது.

**தொடரமைப்பு தொடர்பான மொழியியல் கோட்பாடுகள்**

**அண்மையுறுப்பு கோட்பாடு**

சொற்கள் தனி தனியாக இருப்பினும் அவற்றின் அருகே அமைந்துள்ள பிற சொற்களுடன் நெருங்கிய தொடர்புக் கொண்டு அமைந்துள்ளன.அவற்றை அண்மைச்சொற்கள் அல்லது அண்மையுறுப்புகள் என்கிறோம். பின்வரும் தொடரில் ”அந்த” என்ற சொல் ”பையன்” என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையது. அதுபோல ”வேகமாக” என்ற சொல் “ஒடினான்” என்ற சொல்லுடன் நெருங்கியத் தொடர்புடையது .

{அந்த பையன் வேகமாக ஒடினான்}

{ அந்த பையன்} { வேகமாக ஒடினான் }

மேலே குறிப்பிட்ட அண்மையுறுப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் பின்வரும் வாக்கியங்களிலுள்ள பொருள் மயக்கங்களை தீர்வு காணலாம்.

புதிய மாணவர்கள் விடுதி

புதிய மாணவிகள் விடுதி

**மாற்றிலக்கணக் கோட்பாடு**

மாற்றிலக்கணக் கோட்பாடு தொடரியல் விதிகளையும் மாற்றல் விதிகளையும் உள்ளடக்கியது.

தொடரியல் விதிகள்

வாக்கியம் (s) = பெயர்த் தொடர்(பெயர்) + வினைத்தொடர்(வினை)

பெயர்த் தொடர் = பெயரடை( பெயரெச்சம்)( பெயரடை) + பெயர்(பெயர்)

வினைத்தொடர் = வினையடை (வினையெச்சம்)(வினை)+ வினை ( வினை)

வேற்றுமைத்தொடர் = பெயர்த் தொடர் ( பெயர் ) + வேற்றுமை ( வேற்றுமை)

இவ்விதிகளைக் கொண்டு நாம் எளிமையாக பொருள் மாறாமல் தொடர்களைப் பிரிக்கலாம்.ஆனாலும் சில தொடர்களைப் பிரிக்க முடியாது. அவற்றிற்கு சில மாற்றல் விதிகள் தேவை. பின்வருவன மாற்றிலக்கண கோட்பாட்டின் அடிப்படை அமைப்பாகும்.

பொருண்மை விதிகள்-அக அமைப்பு ----→மாற்றல் விதிகள்-----→ புற அமைப்பு-ஒலியன் மற்றும் தர்க்க விதிகள்

**ஜீ.பீ.கோட்பாடு** உலக மொழிகள் எல்லாவற்றையும் ஒரு பிரிவின் கீழ்க் கொண்டு வந்து ஒரு பொது இலக்கணத்தை (Universal Grammar)உருவாக்குவதுதான் ஜீபீ கோட்பாட்டின் கொள்கையாகும்.ஜீபீக் கோட்பாடு 6 உட்பிரிவுகளைக் கொண்டது.

**மினிமலிஸ்டு கோட்பாடு**

1992-ஆம் ஆண்டு இக்கோட்பாடு உருவாக்கப்பட்டது.இக்கோட்பாட்டின் முக்கிய நோக்கம் ஜீ.பீ கோட்பாட்டை சுருக்குவதாகும். இக்கோட்பாட்டில் இரண்டு பகுதிகள்

உள்ளன. 1) சொல் தரவகம்( Lexicon) 1) கணினி விதிகளின் பகுதி( Compuational rule part)

**சொல் தரவகம் வேர்ச் சொற்களையும், விகுதிகளையும் சேர்த்து வைத்திருக்கும். கணினி விதிகளின் பகுதி இச்சொல் தரவக ப் பகுதியை தேவைப்படும்போது பயன்படுத்திக்கொள்ளும்.**

**எ.டு**

**சொல் தரவகம்**

| **சொல்** | **பெயர்** | **வினை** | **விகுதி** | **இடம்** | **எண்** | **பால்** | **வேற்றுமை** | **காலம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| **பையன்** | 1 | 0 | 0 | 3 | 1 | 1 | 1 | 0 |
| **ஆல்** | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 3 | 0 |
| **வாழ்** | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| **ந்த** | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 |

வேற்றுமைச் சட்டம்

பெயர்ச்சொல் பற்றியது - எந்த வேற்றுமை எந்த வகையான பெயர்ச் சொற்களோடு சேரும்.

ஆ. வினைச்சொல் பற்றியது - எந்த வினைக்கு எந்தெந்த வேற்றுமைச் சட்டங்கள் கண்டிப்பாக வேண்டுவன.

கொல்' என்னும் வினைக்கு [+ உயிருள்ளது] என்பது செயப்படுபொருளாக வர வேண்டும்; எனின், பெயர்ச்சொல் [+ உயிருள்ளது] என அமைய வேண்டும்.

வினைச்சொல்லின் கூறுகளே அதன் வேற்றுமைச் சட்டத்தைக் தேர்வு செய்கின்றன.

பெரும்பாலும் எந்தெந்த வினைகள் எந்தெந்த வேற்றுமைத் தொடர்களை ஏற்றுக் கொள்கின்றன என்பது தெளிவாக அமைந்திருக்கும் . இதையே ஒரு வினைச் சொல்லுக்கான 'வேற்றுமைச் சட்டம் ' என்று கூறுவார்கள் .அதிலும் சிறப்பாக , வினைக்கென ஒரு கட்டாய வேற்றுமைச் சட்டமும் தேவை கருதி சேர்க்கப்படும் விருப்ப வேற்றுமைச் சட்டங்களும் அமைவது மொழியில் கண்கூடு.

எ.டு

”கொடு” என்ற சொல் இரண்டு வேற்றுமைகளை எடுத்துக்கொள்ளும்.

+ - ஐ வேற்றுமை

+ - கு வேற்றுமை

கண்டிப்பாகச் சேர்க்க வேண்டியவையாகும்

+ - இல் வேற்றுமை போன்றவை கூடுதல் செய்திகளுக்காகச்

சேர்க்கப்படுகின்றவையாகும். இவை மற்ற மொழிகளுக்கும் பொருந்தும்.

She gave (a flower) (to him)

அவள் ஒரு மலரை அவனுக்கு கொடுத்தாள்.

வேற்றுமைச் சட்டங்களையும், வினைகளையும் அவை தரும் பொருண்மைக் கூறுகளையும் ஆராய்வதற்கு வேற்றுமை உருபுகளும் அவற்றின் பயன்களும் மிகத் தேவை. இதைப் போன்றே ஒவ்வொரு வேற்றுமைக்கும் பெயரிடுவதும் அதன் பயனை அடிப்படையாகக் கொள்கிறது

**குறுந்தொகைத் தொடரமைப்பு**

**நிலத்தினும்(பெயர்+உம் ) பெரிதே(பெயர்+ஏ) வானினும்(பெயர்+உம்) உயர்ந்தன்று(பெயர்+அன்று)**

நிலத்தின் அகலம் போலவும், வானின் உயரம் போலவும்

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**நீரினும் (பெயர்+உம் )ஆரள வின்றே(பெயர்+இன்று+ஏ) சாரல்(பெயர்)**

கடலின் ஆழம் போலவும் பெரிது

வாக்கியம் =பெயர்த் தொடர் + பெயர்த்தொடர்

**கருங்கோற்(பெயரடை+பெயர்) குறிஞ்சிப்(பெயர்) பூ(பெயர்)க்கொண்டு(வேற்றுமை)**

குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**பெருந்தேன்(பெயரடை+பெயர்) இழைக்கும்(பெரெச்சம்)**

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**நாடனொடு(பெயர்+வேற்றுமை) நட்பே(பெயர்+ஏ).**

தேனடை செய்யும் நாட்டை கொண்ட தலைவனுடன் நான் கொண்ட நட்பானது

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**கழனிமாஅத்து(பெயர்) விளைந்து உகு தீம்பழம் (பெயர்)**

வயல் அருகில் நின்ற மாமரத்தின் முதிர்ந்து விழும் இனிய கனிகளை

வாக்கியம்  = பெயர்த் தொடர் + பெயர்த்தொடர்

**பழன வாளை(பெயர்)  கதூஉம்(பெயரெச்சம்) ஊரன்(பெயர்)**

*பொய்கையில் உள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணும் ஊரின் தலைவன்

வாக்கியம் =  பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**, எம்இல்( பெயர்)  பெருமொழி( பெயர்)  கூறி(வினையெச்சம்), தம்இல்( பெயர்)**

எம் வீட்டில் பெருமொழிகளை கூறி சென்றாலும் தன்னுடைய வீட்டில்

வாக்கியம்  = பெயர்த் தொடர் + வினைத்தொடர்

**கையும்(பெயர்+உம்) காலும்(பெயர்+உம்) தூக்க(பெயரெச்சம்), தூக்கும்(பெயரெச்சம்)**

கையும்(பெயர்+உம்) காலும் தூக்க

**ஆடிப்பாவை(பெயரெச்சம்) போல( உவம உருபு),**

தூக்குகின்ற கண்ணாடியுள் பாவை போல்

வாக்கியம் = பெயர்த் தொடர் +பெயர்த் தொடர்

**மேவன(வினையெச்சம்) செய்யும்(வினையெச்சம்) தன்(பெயர்) புதல்வன்(பெயர்)**

**தாய்க்கே! (பெயர்+ஏ)**

ஈன்ற தாய்க்கு மட்டும் அவள் விரும்பியவற்றை அவன் செய்வான்!

வாக்கியம் = வினைத்தொடர் + பெயர்த்தொடர்

**யாயும்(பெயர்+உம்) ஞாயும்(பெயர்+உம்) யாரா கியரோ(,**

**எந்தையும்(பெயர்+உம்) நுந்தையும்(பெயர்) எம்முறைக்(பெயர்) கேளிர்,**

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் உறவினர்களல்லர். என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் எவ்வகையிலும் உறவினரல்லர்**

**யானும் (பெயர்)நீயும்(பெயர்) எவ்வழி யறிதும்,**

**நானும் நீயும் கூட ஒருவரையொருவர் முன்னர் அறிந்ததில்லை என்றாலும் கூட,**

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**அன்புடை (பெயர்)நெஞ்சம்(பெயர்) தாங்கலந் தனவே.**

**அன்புடை நம் நெஞ்சம் கலந்து விட்டது**

வாக்கியம் = பெயர்த் தொடர் + வினைத்தொடர்

**கொங்கு(பெயர்) தேர் வாழ்க்கை(பெயர்) அஞ்சிறை(பெயரடை+பெயர்)த் தும்பி(பெயர்)**

ஒவ்வொரு மலராகச் சென்று தேன் உண்டு திரியும் அழகான சிறகுகளை உடைய வண்டே!.

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**காமம்(பெயர் ) செப்பாது(பெயர்) கண்டது(பெயர்) மொழிமோ(வினை)**

விருப்பத்திற்கிணங்க விடை கூறாமல் நடு நிலையாக நின்று பதில் சொல்.

வாக்கியம் = பெயர் தொடர் + வினைத்தொடர்

**பயிலியது(பெயர்) கெழீஇய நட்பின்(பெயர்)**

நெருங்கிய நட்புடையவளும் மயில் போன்ற

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

**மயிலியல்(பெயர்+ பின் ஒட்டு) செறி எயிற்று அரிவை(பெயர்+வேற்றுமை)**

**கூந்தலின்(பெயர் + வேற்றுமை)**

வாக்கியம் = பெயர்த் தொடர் + பெயர்த் தொடர்

மெல்லிய தன்மையுடையவளும் நெருங்கிய அழகிய பற்களையும் கொண்ட இப்பெண்ணின் கூந்தலைப் போல

**நறியவும்(பெயர்+உம்) உளவோ(வினை+ஓ) நீ(பெயர்) அறியும்(பெயரெச்சம்) பூவே(பெயர்+ஏ).**

நறுமணம் கமழும் மலர்கள் உண்டா?நீ கண்டறிந்த பூக்களிலே

வாக்கியம் = வினைத்தொடர் + பெயர்த்தொடர்

## முடிவுரை:

**குறுந்தொகை பாடல்களில் பெரும்பான்மையான தொடர்கள் பெயர் தொடர்களாக அமைந்திருக்கின்றன.முற்று வினைகள் குறைவாகவே உள்ளது. வினையெச்சத் தொடர்கள் பெயரெச்சத் தொடர்களை காட்டிலும் குறைவாகவே உள்ளது.**

### தேர்ந்தெடுக்கப்பட்ட துணைநூற்பட்டியல்


1.ச. அகத்தியலிங்கம்(2002) **தமிழ்மொழி அமைப்பியல்** ,மெய்யப்பன் தமிழாய்வகம் , சிதம்பரம்.

2.ச.அகத்தியலிங்கம் (2009) சங்கத் தமிழ் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமஇரண்டாவது முதன்மைச் சாலை,சி.ஐ.டி. வளாகம், தரமணிசென்னை – 600 113